வாக்குமூலம்

தலைமை குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் S.C No.142/2021

வழக்கு சாட்சி – PW – 6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திரு.போஸ் | தொழில் | :: |
| தந்தை பெயர் | :: | வயது | :: |
| கிராமம் | : | | |
| தாலுகா | :: | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 22.07.2024.

1, 2 எதிரிகள் ஆஜர்.

முதல் விசாரணை (நேரம் : காலை 11.10 மணி)

நான் தற்போது மண்டபம் கடலோர காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 30.03.2021ம் தேதி 15.00 மணிக்கு நானும், காவலர் பிரபாகரனும் காவல் ஆய்வாளருடன் மண்படம் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட மண்டபம் காந்தி நகர் ரயில்வே பிடர் ரோட்டில் மண்டபம் காவல் நிலைய குற்ற எண்.69/2021 வழக்கு சம்மந்தமான எதிரிகளை தேடி வந்த நிலையில் காவல் ஆய்வாளர் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் மண்டபம் பேருந்து நிலையம் அருகில் 2ம் எதிரி துரை, 3ம் எதிரி சண்முகவேல் இருவரும் நின்று கொண்டிருந்தவர்களை காரணம் கூறி ஆய்வாளர் அவர்கள் கைது செய்தார். பின்பு 3ம் எதிரி சண்முகவேலை காவல் ஆய்வாளர் விசாரித்தார். அவர் தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் வழக்கு

சம்பவத்திற்கு பயன்படுத்த வைத்திருந்த வாள், அரிவாள் ஆகியவற்றை 1ம் எதிரி கௌசல்யா வீட்டிற்கு பின்புறம் மணலில் மறைத்து வைத்திருப்பதாகவும், தன்னை அழைத்து சென்றால் எடுத்து ஆஜர் செய்வதாகவும் கூறினார். அன்றையதினம் 16.00 மணிக்கு 1ம் எதிரி கௌசல்யா வீட்டிற்கு பின்புறம் மணலில் மறைத்து வைத்திருந்த வாள் மற்றும் அரிவாளை எடுத்து ஆஜர் செய்ததை காவல் ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் காவலர் பிரபாகரன் கையொப்பம் செய்தார். 3ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.2. அத்தாட்சி அ.சா.ஆ.3. என்னிடம் காட்டப்படும் வாள் மற்றும் அரிவாள் தான் 3ம் எதிரி எடுத்து ஆஜர் செய்த ஆயுதங்களாகும். இது சம்மந்தமாக மண்டபம் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.

(ஒம்/-சி.மோகன்ராம்)
தலைமை குற்றவியல் நடுவர்,
இராமநாதபுரம்.

வாக்குமூலம்

தலைமை குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் S.C No.142/2021

வழக்கு சாட்சி – PW – 7

பெயர் :: திரு.பிரபாகரன் தொழில் ::

தந்தை பெயர்::  வயது ::

கிராமம் :

தாலுகா ::

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 22.07.2024.

1, 2 எதிரிகள் ஆஜர்.

முதல் விசாரணை (நேரம் : காலை 11.20 மணி)

நான் தற்போது உச்சிப்புளி காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 2021ம் ஆண்டு மண்டபம் காவல் நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணிபுரிந்தேன். கடந்த 30.03.2021ம் தேதி மதியம் 13.00 மணிக்கு நானும், முதல் நிலை காவலர் போஸ் மற்றும் காவல் ஆய்வாளர் ஜாக்குலினுடன் மண்படம் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட மண்டபம் காந்தி நகர் ரயில்வே பிடர் ரோட்டில் மண்டபம் காவல் நிலைய குற்ற எண்.69/2021 வழக்கு சம்மந்தமான எதிரிகளான துரை மற்றும் சண்முகவேல் ஆகியோரை தேடி வந்த நிலையில் காவல் ஆய்வாளர் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் மண்டபம் பேருந்து நிலையம் அருகில் 2ம் எதிரி துரை, 3ம் எதிரி சண்முகவேல் இருவரும் நின்று கொண்டிருந்தவர்களை கைதிற்கான காரணம் கூறி ஆய்வாளர் அவர்கள்

கைது செய்தார். பின்பு 3ம் எதிரி சண்முகவேலை காவல் ஆய்வாளர் விசாரித்தார். அவர் தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சொத்து பிரச்சனை சம்மந்தமாக சண்டை ஏற்பட்டதாகவும், வழக்கு சம்பவத்திற்கு பயன்படுத்த வைத்திருந்த வாள், அரிவாள் ஆகியவற்றை 1ம் எதிரி கௌசல்யா வீட்டிற்கு பின்புறம் மணலில் மறைத்து வைத்திருப்பதாகவும், தன்னை அழைத்து சென்றால் எடுத்து ஆஜர் செய்வதாகவும் கூறினார். அன்றையதினம் 16.00 மணிக்கு 1ம் எதிரி கௌசல்யா வீட்டிற்கு பின்புறம் மணலில் மறைத்து வைத்திருந்த வாள் மற்றும் அரிவாளை எடுத்து ஆஜர் செய்ததை காவல் ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் முதல் நிலை காவலர் போஸ் கையொப்பம் செய்தார். 3ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் வாள் மற்றும் அரிவாள் தான் 3ம் எதிரி எடுத்து ஆஜர் செய்த ஆயுதங்களாகும். இது சம்மந்தமாக மண்டபம் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.

(ஒம்/-சி.மோகன்ராம்)
தலைமை குற்றவியல் நடுவர்,
இராமநாதபுரம்.